திரு. சி. நஞ்சன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதி மலைப் பிரதேசமான பகுதி. அந்த வட்டார தாசில் தாருக்கு ஜீப் வசதி கிடையாது. பஞ்சாயத்து யூனியனில் ஒரு ஜீப் இருந்தது. அது அடிக்கடி ரிப்பேர் ஆகி வந்தது, அதையும் கண்டெம் செய்துவிட்டார்கள். அந்த ஏரியாவில் இப்போது ஜீப்பே இல்லை. ஆகவே, அந்த வட்டாரத்தில் நல்ல முறையில் சேவை செய்ய தாசில்தாருக்கு உதவியாக உடனே ஜீப் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது நல்ல கோரிக்கை. உடனடியாகக் கவனிக்கிறேன்.

நீலகிரி மாவட்ட அரசு ஊழியர்களுக்கு மாரிக்காலப்படி

*371 வினு.—திரு. கே. போஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட குளிர்கால படி, உதகை, குன்னூர், கோத்தகிரி ஆகிய மூன்று நகரங்களில் மட்டும் பணிபுரியும் அரசு ஊழியர்கட்கு வழங்கப் பட்டுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால், மற்ற கிராமப் பகுதிகளில் பணிபுரியும் ஊழியர் களுக்கும் வழங்கப்படாமைக்குக் காரணம் யாது ?

(உ) அந்த ஊழியர்களுக்கும் இந்தக் குளிர்கால படி கிடைக்க வழிவகை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ), (இ), (உ)—உதகை, கோத்தகிரி, குன்னூர், கோடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள அரசு பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாரிக்காலப் படி 1,000 மீட்டர் உயரத்திலே உள்ள மலைப் பகுதிகளில் பணியாற்றும் அரசு பணியாளர்களுக்கும் 68—69 மாரிக்காலம் முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. போஜன் : இப்போது கொடுக்கப்படுகிற விண்டர் அலவன்சு உதகை, கோத்தகிரி, குன்னூர் போன்ற நகரங்களில் உள்ளவர்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. பனி என்பது இங்கேமட்டும்தான் பெய்கிறது என்பதல்ல. நீலகிரி மாவட்டம் முழுவதுமே இருக்கிறது. ஆகவே மற்ற எல்லா இடங்களிலும் உள்ள அத்தனை அலுவலர்களுக்கும் கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கேள்வி கேட்டு நான்கு மாதங்களுக்குமேல் ஆகிவிட்டது என்று நினைக்கிறேன். முன்பு உதகை கோத்தகிரி, குன்னூர், கோடைக்கானல் போன்ற நகரங்களுக்குத்தான் இருந்தது. ஆனால், 69-ல் 1,000 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. கூடலூர், கீழ்கோத்த கிரி, மஞ்சூர், நடுவட்டம் இன்னும் வால்பாறை போன்ற எல்லா இடங் களிலும்—ஆயிரம் மீட்டர் உயரத்திற்குமேல் உள்ள பிரதேசத்தில் இருக்கும் அலுவலர்கள் எல்லோரும் இந்த அலவன்சு பெறுகிறார்கள். ஊருக்குப் போனவுடன் கூடக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

திரு. ஜெ. பெள்ளி கவுடர் : தலைவர் அவர்களே, இந்தக் குளிர் காலப் படியைக் கொடுப்பதில் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. சிலபேர் களுக்குக் கிடைக்கிறது. சிலபேர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படிக் கொடுக்கிறபொழுது மலையினுடைய கணக்கை எடுக்கும்பொழுது 5,000 ; 3,000 ; 2,000 என்ற அளவை வைத்துப் படிப்படியாக அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

1969 மார்ச் 18]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எனக்கு அப்படியொன்றும் தகவல் இல்லை. அப்படிப்பட்ட நிலைமை உண்மையிலேயே இருந்தால் அதுபற்றி அங்குள்ள அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லலாம். இன்னும் பெரிய விவகாரமாக இருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அரசாங்கம் கவனிக்கலாம்.

திரு. கே. விநாயகம் : 1000 மீட்டருக்கு மேலேதான் குளிர் அடிக்கிறது; என்பது அரசாங்கத்தின் கருத்தா ? 1,000-க்கு 10-க்கு கீழே 990-ல் குளிர் இல்லை என்று அர்த்தமா ? 1,000-க்கு கீழே எத்தனை கிராமங்கள் பட்டணங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் என்ன நிவாரணம் தரப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வி அவ்வளவு நியாயமான கேள்வியல்ல. ஆயிரம் என்பதில் சில வரம்புகளைக் கட்டுகிறோம். 1,000 மீட்டர் என்பது ஒரு எல்லைக்கோடு. அதற்குக் கீழே 999-க்கு இல்லையா என்று சொன்னால் எங்கே போய் விடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசிக்க வேண்டும். 999-க்குக் கொடுத்தால், மாண்புமிகு உறுப்பினர் 998-க்கு இல்லையா என்று கேட்பார்கள். எனவே சில வரம்பு முறைகளுக்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு இயங்குகிறோம். அவர்களுக்கு அந்த வகையில் சில செலவுகள் ஏற்படும் என்பதற்காக அரசாங்கம் இதை ஏற்படுத்தி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு விநாயகம் அவர்கள் மலை ஏறட்டுமே ! (சிரிப்பு).

திரு. கே. விநாயகம்: மலையிலே ஏறுவது என்பது பிரச்னையல்ல. கேள்விதான், இப்பொழுது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களைக் கூப்பிடவில்லை.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இந்த விண்டர் அலவன்ஸ் எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக் கொண்டு அந்த ஊழியர்களுக்கு கம்பளிப் போர்வையாவது வாங்கிக்கொள்ளக் கூடிய அளவுக்கு விண்டர் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: விண்டர் அலவன்ஸ் என்பது அடிப்படைச் சம்பளம் 750 ரூபாய்க்கு மேற்படாதவர்களுக்கு 10 சதவீதம்

10 per cent of pay subject to a minimum of Rs. 10 and maximum of Rs. 25.

என்ற அளவிலே நான்கு மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

four months from 16th November of the year to 15th March of the subsequent year.

இப்படி நான்கு மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. 750 ரூபாய்க்கு மேல் அடிப்படைச் சம்பளம் இருக்கிறவர்களுக்கு

amount by which pay falls short of Rs. 775.

என்ற அளவிலே கொடுக்கப்படுகிறது.

இராமநாதபுரத்தை இரு மாவட்டங்களாக்குதல்

* 372 வினா.—திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு எதும் அரசிடம் உண்டா ?